## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம்

---

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, மாச்சு மாதம் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குத் துறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை : சதம் 35 தபாற் செலவு : சதம் 50

## 1981 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம்

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 52/79
1255

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது. *1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை நீக்குதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) கப்பற்றெழில் முகவர் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு முன்னும் எவரேனும் ஆள், விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில், அவர் எவருடைய சார்பில் கப்பற்றெழில் முகவராக அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு முன்னுகிறாரோ, விடயத்திற்கேற்றவாறு அந்தச் சொந்தக்காரரை, முதல்வரை, வாடகைக்கமர்த்துநரை அல்லது தலைவரைக் குறித்துரைத்துத் தோதான அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(1அஅ) உட்பிரிவு (1அ) என்பதன்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைத் தோதான அதிகாரி அங்கீகரிக்குமிடத்து, எவருடைய சார்பில் விண்ணப்பகாரர் கப்பற்றெழில் முகவரொருவர் என்ற தொழிலைக் கொண்டு நடாத்தக்கூடுமோ, விடயத்திற்கேற்றவாறு அந்தச் சொந்தக்காரரை, முதல்வரை, வாடகைக் கமர்த்துநரை அல்லது தலைவரைக் குறித்துரைத்து உரிமமொன்றை அவர் விண்ணப்பகாரருக்கு வழங்கலாம் :
ஆயின், எவ்வாறாயினும்—

(அ) விண்ணப்பகாரர், கப்பற்றெழில் முகவர் ஒருவர் என்ற தொழிலைத் தகுந்தமுறையில் கொண்டு நடாத்துவதற்கு விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டிராதவிடத்து ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிராத விடத்து,

மட்டுமே அவர் எவரேனும் விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்க மறுக்கலாம்." ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியை விட்டு விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பெற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அல்லது அமைக்கப்பெற்றுப் பதிவு செய்யப்படுகின்றதாக இருந்தாலொழிய, 1971 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கப்பற்றொழில் கூட்டுத்தாபனத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு ; அல்லது" ; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில்—

(அ) பந்திகள் (அ) என்பதனையும் (ஆ) என்பதனையும் விட்டு விட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கும் எவரேனும் ஆட்களிடமிருந்து தேவைப்படுத்தப்படும் தகைமைகள் ;

(ஆ) உரிமங்கள் எந்தக் காலப்பகுதிக்கு வழங்கப்படலாம் என்பதும் அத்துடன் என்ன நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வழங்கப்படலாம் என்பதும் ;";

(ஆ) அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) கப்பற்றொழில் முகவரொருவரை இடமாற்றம் செய்வதற்கான விண்ணப்பங்கள், சொந்தக்காரரால், முதல்வரால், வாடகைக்கமர்த்துநரால் அல்லது தலைவரால் எந்தச் சந்தருப்பங்களில் செய்யப்படலாம் என்பதும், அத்துடன் அத்தகைய விண்ணப்பங்கள் என்ன விதத்தில் கையாளப்படலாம் என்பதும் ;".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30; (வெளிநாடு) ரூபா 40: ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.